**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 152 of 2024

Depositions of PW - 3 witness for ________ Prosecution / Defence / Court

Name : குமரேசன்

Father's Name : பழனியப்பன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th **day of April** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் மாவட்டம் ஆண்டி நாயக்கன் வலசுவில் குடியிருந்து கொண்டு கடையில் வேலை பார்த்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த ரத்தினசாமி எனக்கு உறவினர் கிடையாது. எங்கள் வீட்டின் அருகில் குடியிருந்து வந்தவர். 11.01.2018 ஆம் தேதி மாலை 06.30 மணிக்கு எனது உறவினர் ரத்தினசாமி என்பவர் இருசக்கர வாகனத்தில் சென்ற பொழுது வளைவில் தவறி கீழே விழுந்துள்ளது சம்பந்தமாக 16.01.2018 ஆம் தேதி சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக ரத்தினசாமி அவர்களின் மகன் ரமேஷ் அவர்கள் நெகமம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். போலீசார் நானும் நடராஜ் என்பவரும் சம்பவ இடத்தில் இருந்த பொழுது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் நடராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம். பார்வை

மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசர் **அ.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தில் இறந்த ரத்தினசாமி என்னுடைய உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து சம்பவ இடத்தில் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**